**ஆண்டிபாளையம் ஊராட்சி தலைவர் அவர்களின் நடவடிக்கை முன்னிலை**

**திரு. A . ஆதிநாராயணன்**

பொருள்:- மனைப்பிரிவு அங்கீகாரம் - திருச்செங்கோடு வட்டாரம், ஆண்டிபாளையம் ஊராட்சி / கிராமம் - சர்வே எண்.72/1A2-ல் 1.10 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டது - இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை 1:- அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3)-த்துறை நாள் 04.05.2017)

பார்வை 2:- அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 04.02.2019

பார்வை 3:- அரசாணை எண்.138 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (நவ4(3)-த்துறை நாள் 04.06.2004)

பார்வை 4:- உதவி இயக்குநர் நாமக்கல் மாவட்டம், நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்கள் கோப்பு எண்.NKL/W013NWP0/18875/2023/TCP அப்ரூவல் எண். Approval No.SWP/DTCP/NAMAKKAL/LAYOUT No.416/2023, நாள் : 19/12/2023

பார்வை 5:- திருமதி. T. உமாதேவி, 2/1, தைலாம்பிகை நகர் எண்.5, தொண்டிக்கரடு, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம் - 637 211.

தலைவர்,
ஊராட்சி மன்றம்,
ஆண்டிபாளையம்.

Scanned with AnyScanner

**உத்தரவு:-**

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், ஆண்டிபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் சர்வே எண்.72/1A2-ல் 1.10 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முறைப்படுத்தப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு உதவி இயக்குநர் நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் உத்தரவின் படி மனைப்பிரிவுக்கு வரைப்பட எண்ணிடப்பட்டுள்ள ம.வ./நா.ம.எண்.416/2023 தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு 3% விற்பனை வரி மதிப்பான ரூபாய் 8,865/- மூபலகு எண்ணாயிரத்து எண்ணூற்று அறுபத்து ஐந்து ரூபாய்களும் அரசு கணக்கில் செலுத்தப் பட்டுள்ளது மற்றும் ஊராட்சி பொது நிதியில் செலுத்தப்பட்டுள்ளது. மனை ஒன்றுக்கு ரூபாய் 1,000/- மூபலகு ஓராயிரம் ரூபாய்கள் வீதம் ரூபாய் 13,000 (Scrutiny fees) மற்றும் ஆண்டிபாளையம் ஊராட்சி வளர்ச்சி கட்டணமாக ரூபாய் 1,000/- மூபலகு ஓராயிரம் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீடுகள் மற்றும் மனைப்பிரிவு சாலைகள், உள்ளாட்சிக்கு தான பத்திரம் மூலம் திருச்செங்கோடு சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆண்டிபாளையம் ஊராட்சி மன்ற தலைவர் என்ற பெயரில் தானமாக பதிவு செய்து வழங்கப் பட்டுள்ளது. தான பத்திர எண்.10238/2023.

மேற்படி மனைப்பிரிவுக்கு மனுதாரரால் சாலை வசதி கழிவு நீர் கால்வாய் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய அனைத்து தொகைகளும் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனைப்பிரிவிற்கு ஆண்டிபாளையம் ஊராட்சி மன்றம் கீழ்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டு மற்றும் கிராமம் மூலம் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

தலைவர்,
ஊராட்சி மன்றம்,
ஆண்டிபாளையம்.

Scanned with AnyScanner

**நிபந்தனைகள்:**

1. பார்வை 4ல் காணும் உதவி இயக்குநர், நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் உத்தேச மனையிட தொழில் நுட்ப ஒப்புதல் கடிதத்தில் தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் பின்பற்றப்பட வேண்டும்.

2. மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகள், நீர்நிலைகள், அரசு புறம்போக்கு, திறந்தவெளி ஒதுக்கீடு, அடுத்த நிலத்திற்கு வழியாக அமையும் காலிமனை, உத்தேச சாலை Rail Corridors, பொது பாதை, நில உச்ச வரம்பு சட்டத்தின் படி உள்ள மனை இடம் மற்றும் அதி உயர்மின்னழுத்த பாதை ஆகியவற்றின் கீழ் அமர்ந்திருக்கக் கூடாது.

3. இம்மனைப்பிரிவின் நிலங்கள் தொடர்பாக, மனைபிரிவு உரிமையாளர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பித்த வில்லங்க சான்றன் சரி தன்மை சரிபார்க்கப்பட்டு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் நாமக்கல் மாவட்டம் அவர்களின் உறுதி செய்து வழங்கிய தொழில் நுட்ப ஒப்புதலின் அடிப்படையில் மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களின் சரித்தன்மை குறித்து புகார்கள் கண்டறிப்படின் ஒட்டு மொத்த மனைப்பிரிவின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தலைவர்,
ஊராட்சி மன்றம்,
ஆண்டிபாளையம்.

Scanned with AnyScanner

பெறுதல்

T. உமாதேவி,
க/பெ. K. செல்வநாயகம்,
கதவு எண்.2/1, தைலாம்பிகை நகர்,
தொண்டிக்கரடு,
திருச்செங்கோடு,
திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம் - 637 211.

நகல்

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
நாமக்கல்.
2. சார்பதிவாளர் அலுவலகம்,
திருச்செங்கோடு.
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருச்செங்கோடு வட்டம்.

தலைவர்,
ஊராட்சி மன்றம்,
ஆண்டிபாளையம்.

Scanned with AnyScanner